# அரண்


பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Multidisilinary Journal )

ISSN: 2582-399X




காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்


*Vol:6 Issue :24 October 2024*

கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research



# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்
இரா.பிரதீப் ராஜ்

திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்
முனைவர் இரா. யசோதா

ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை
மு.கயல்விழி

காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்
முனைவர் க. ஜவகர்

இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

விளக்கு பண்பாடு ”சாவா மூவா பேராடு”
கோ. அசோகன்

காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்
க.பிரியா

சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்
மு.முத்துமாரி

நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்
கு.வருதராஜ்

திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்
முனைவர் ஆ. கவிதாராணி

கதை பேசும் ஆடல் கலையான கதகளி
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்
மு.சத்தியா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி
அ.சகாய ஜெசிகலா

பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்
ச.பாப்பாசெல்வம்

சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்
முனைவர். அ. அமுல்ராஜ்

Exploring the Dynamics of Tourism Planning
S.John Abraham

Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum
Gayathry. D

Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies
P.M.Shiyana.

மக்கள் பாடகர்களின் சமூக நிலை
வ.விக்டர்

இசையும் சமூக விமர்சனமும்
வ.விக்டர்

Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education
V. Vijay Arun

Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music
V. Vijay Arun

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# வரலாறு



# சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்

## *The Rule and Majesty of The Sambuvarayar*

**முனைவர். அ. அமுல்ராஜ்,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வள்ளல் பெ.தெ.லீ செங்கல்வராய நாயக்கர் கலை (ம) அறிவியல் கல்லூரி,
சூளை, சென்னை -112.

*Dr.A.Amulraj*
*Assistant Professor of Tamil*
*Vallal P.T Lee Chengalvaraya Naicker Arts and Science College,*
*Choolai, Chennai -112*

**ஆய்வுச் சுருக்கம்**

பிற்காலச் சோழர்கள் ஆட்சியில் படைத்தலைவர்களாகப் பணியாற்றியவர்கள் சம்புவராயர்கள். இவர்கள், இன்றைக்குள்ள விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த முன்னூர் பகுதியின் அதிகாரிகளாக இருந்துள்ளனர். எனவே, பழங்காலத்தில் முன்னூர் பகுதியை ஆண்ட நல்லியங்கோடன் மரபினர்களாக இவர்களை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பிற்காலச் சோழப் பேரரசு முடிவுக்கு வந்தபோது, 1257 -இல் இவர்கள் முதல் தன்னாட்சியை, திருவண்ணாமலை மாவட்டம் படைவீட்டில் நிறுவினர். இம்முதல் தன்னாட்சியை நிறுவியவர் இராஜகம்பீர சம்புவராயர் ஆவர். தெற்கில் காவிரி தொடங்கி, வடக்கில் திருப்பதி (வேங்கடம்) வரை இவர்கள் ஆட்சி செய்துள்ளனர். சகலலோக சக்கரவர்த்தி, வென்று மண்கொண்டான், சென்ற திசை வென்றான், எதிரிலி, நித்ராவசன விஜயீ போன்ற பல்வேறு சிறப்புப் பட்டங்களில் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். வீரசம்பன் குளிகை, நாராயணன் காசு போன்ற நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர். இவர்கள் ஆட்சிக்கு வந்தபோது வேற்று மொழி, மதத்தவர்கள் படையெடுப்பு தமிழ்நாட்டில் நடைபெற்றது. அப்படையெடுப்பிலிருந்து தமிழ்நாட்டைக் காத்தனர். பிறபகுதியிலிருந்து போரில் உயிருக்குப் பயந்து ஓடிவந்த மக்களுக்கு அஞ்சினான் புகலிடங்களை இவர்கள் ஏற்படுத்தினர். வேளாண் உற்பத்திக்காகப் புதிதாக ஏரிகள், ஆற்றுக்கால்வாய்கள் வெட்டப்பட்டன. கோயில்களுக்கு இறையிலி நிலங்கள், கொடைகள் அளிக்கப்பட்டன. போர்க்களங்களில் பெற்ற வெற்றியின் நினைவாக பல்வேறு புதிய ஊர்களும், தெருக்களும் அமைக்கப்பட்டன. படைவீட்டில் அகக்கோட்டை, புறக்கோட்டை, மலையரண், அரண்மனைகள் ஆகியவை கட்டப்பட்டிருந்தன. இவர்கள் குறித்து கவிச்சக்கரவர்த்தி கம்பர், இரட்டைப்புலவர்களான இளஞ்சூரியர், முதுசூரியர் ஆகியோர் புகழ்ந்து பாடல்களை இயற்றியுள்ளனர். தமிழகத்தின் இடைக்காலத்தில் சிறந்து விளங்கிய இவர்கள் குறித்து, தமிழக வரலாற்றில் இன்று வரைப் பெரிதாகக் கவனம் பெறவில்லை. எனவே, சம்புவராயர்களின் ஆட்சி, மாட்சிமை குறித்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** சம்புவராயர்கள், படைவீடு, சோழர் படைத்தலைவர்கள், வீரசம்பன் பணம், காளைச் சின்னம்.

*Abstract*

*The later Cholas had the Sambuvarayar as their chiefs of army staff. These were the officers of the present day Villuppuram district, and of the Munnoor area next to Tindivanam. Therefore, the researchers consider them to be descendants of the Kiing 'Nalliangoden' who ruled the region of 'Munnur' in ancient times. When the later Chola Empire came to an end, they established the first autonomy in 1257 in the district of Thiruvannamalai at Padaiveedu. The first person to establish autonomy was Raja Kambeera Sambuvarayar. They ruled from Kaveri in the south to Tirupati (Vengadam) in the north. They have been called by various special titles such as Chakala-Loka Chakravarti, Ventru Mankondan, Centra-Dhisai Ventran, Ethirili, Nitravasana Vijayee. Coins such as the Veerasamban Khuligai and Narayanan Kaasu were printed and issued. When they came to power, Tamil Nadu was invaded by people of other languages and religions. They protected Tamil Nadu from the invasion. They established "anchored shelters" for people fleeing for their lives from the war on the other side. New lakes and canals were dug for agricultural production. The temples were endowed with land and donations. Various new towns and streets were built to commemorate the victory on the battlefields. The fort was equipped with Akakotai, Purakkottai, Malai aran and palaces. Poet Chakravarthy (Kambar) and the twins, Illanchuriyar and Muthusuriyar, have composed songs about them. These people, who excelled in the medieval period of Tamil Nadu, have not received much attention in the history of Tamil Nadu till now. Therefore, the purpose of this article is to explain the rule and majesty of the Sambuvarayars.*

***Keywords:*** *Sambuvarayar, Padaiveedu, Chola commanders of troops, Virasamban coin, Bull emblem.*

**முன்னுரை:**

பிற்காலச் சோழப் பேரரசில் பல்வேறு அரச மரபினர் குறுநில மன்னர்களாக; படைத்தலைவர்களாக; சிற்றரசர்களாகப் பணியாற்றினர். இவர்களில் படைத்தலைவர்களாக சோழர்களின் கல்வெட்டுகளில் அறியப்பட்டு, பின்னாளில் குறுநில மன்னர்களாகவும், தனி அரசர்களாகவும் தங்களை உயர்த்திக்கொண்டு தொண்டை மண்டலத்தில் ஆட்சி செய்தவர்கள் சம்புவராயர்கள். தொடக்கக் காலங்களில் சோழர்களுக்கு உறுதுணையாக நின்று பல்வேறு களங்களில் போரிட்டு சோழர்களின் வெற்றிக்குத் துணை நின்றவர்கள். பிற்காலச் சோழ அரசின் ஆட்சி முடிவுக்கு வந்தபோது, தனித்து இவர்கள் ஆட்சியை நிறுவினர். தமிழகத்தின் இடைக்காலத்தில் சிறந்து விளங்கிய சம்புவராயர் ஆட்சியும், அவர்களின் ஆட்சி சிறப்பும், புகழும் தமிழக வரலாற்றில் இன்று வரைப் பெரிதாகக் கவனம் பெறவில்லை. எனவே, சம்புவராயர்களின் ஆட்சியையும், புகழையும் உரிய வரலாற்றுச் சான்றாதாரங்களைக் கொண்டு தொகுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**சம்புவராயர்கள் தோற்றம்**

சம்புவராயர் என்னும் சொல்லைச் சம்பு + அரையர் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். சம்பு என்னும் சிவபெருமானைக் குறிக்கும். சம்புவராயர்கள் சம்புவை (சிவனை)த் தங்களின் குலமுதல்வனாகக் கொண்டிருந்தனர் எனலாம் (சம்புவராயர் வரலாறு, ப.6). அரையர் என்னும் சொல் சோழர் காலத்தில் வீரர்கள், தளபதிகள், அதிகாரிகள் போன்றோருக்கு

அவர்களின் பதவி நிலை குறித்து வழங்கப்பட்ட பட்டமாகும் (மேற்படி, ப.6). இதன்மூலம் சம்புவராயர் என்ற இச்சொல் சோழர்கள் காலத்தில் அவர்களின்கீழ் பணியாற்றிய ஒரு குறிப்பிட்ட மரபினருக்கு வழங்கப்பட்ட பட்டம் என்பது தெளிவாகிறது. அரையர் என்ற பட்டத்துடன் சம்பு எனும் சிவனைக் குறிக்கும் சொல்லையும் இணைத்துக்கொண்டுள்ளனர்.

இவர்களின் கல்வெட்டுகளில் பெரும்பாலும் செங்கேணி என்னும் சொல்லைத் தங்கள் பெயருக்குமுன் குறிப்பிடுகின்றனர். இப்பெயரை முதன் முதலில் பெற்று விளங்கிய சம்புவராயர், செங்கேணி சாத்த நாலாயிரவனான கரிகால சோழ செங்கேணி நாடாழ்வான் (கி.பி.1069) என்பவர் ஆவார் (மேற்படி,ப.6). சம்புவராயர் என்ற பட்டப் பெயருடன் படைத்தளபதிகளாக இருந்த இவர்கள், சோழர்களின் கல்வெட்டுக்களில் செங்கேணி என்ற சொல்லைப் பெயருக்குமுன் ஒட்டாகவும் பயன்படுத்திக்கொண்டனர்.

இச்சொல் அவர்களின் குடும்பப் பெயராக இருந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நாலாயிரவன் என்பது நாலாயிரம் படைக்கு உரியவன் என்பதாகும். முதன் முதலாக அறியப்படும் செங்கேணி சாத்தன் நாலாயிரவன் என்னும் சம்புவராயர் தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டம் முன்னூர் என்ற ஊரைச் சேர்ந்தவராக குறிப்பிடப்படுகிறார். இவருக்குப் பிறகு வந்த செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பனான இராசேந்திர சோழச் சம்புவராயரும் முன்னூரைச் சேர்ந்தவரே. இதிலிருந்து முன்னூரையும், இதனைச் சுற்றியுள்ள பகுதியையும் தொன்மையாக (பூர்வீகமாக)க் கொண்டு விளங்கிய இவர்கள், பிறகு அரசியலில் செல்வாக்குப் பெற்ற நிலையில் வடார்க்காடு, தென்னார்க்காடு செங்கை - அண்ணா மாவட்டப் பகுதிகளுக்கும் சென்று பரவினர் எனலாம் (மேற்படி, ப. 9).

> **ஒய்மானாட்டு முஞ்னூறான பண்டிதசோழச்**
> **சருப்பேதிமங்கலத்துக் குடிப்பள்ளி செங்கேணி**
> **சாத்தன் -**
> **முன்னூற்றூர் குடிப் பள்ளி செங்கேணி சம்புகராஜன்**
> **நாலாயிரவன் அம்மையப்பனான ராஜேந்திர**
> **சோழச் சம்புகராஜன் (மேற்படி, ப.9)**

விழுப்புரம் மாவட்டத்தை உள்ளடக்கிய இன்றைக்குள்ள நிலப்பரப்பு பழங்காலத்தில் ஒய்மானாடு என்று அழைக்கப்பட்டது. இந்நாட்டைச் சங்க காலத்தில் ஆட்சி செய்தவர் சிறுபாணாற்றுப்படை என்னும் சங்க இலக்கிய நூலின் பாட்டுடைத் தலைவன் நல்லியங்கோடன் எனும் அரசன் ஆவார். இதனை நாம் பத்துப்பாட்டு நுல் வழி அறியமுடிகிறது. இவர்வழி வந்த (நல்லியங்கோடன்) மரபினர்களாகவே சம்புவராயர்கள் இருக்கக்கூடும் என்பது ஆய்வாளர்களின் கருத்து. மேற்காணும் கல்வெட்டின் மூலம் இவர்கள் ஒய்மானாட்டு முன்னூர் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதும் பள்ளி என்னும் குலத்தைச் சார்ந்தவர்கள் என்பதையும் அறியமுடிகிறது. இப்பள்ளிகளைக் குறிக்கும் நூற்றுக்கணக்கானச் சோழர் கல்வெட்டுகள் தொண்டை மண்டலப் பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

செங்கேணி சாத்த நாலாயிரவனைத் தொடர்ந்து, அம்மையப்பன் இராசேந்திரச் சோழச் சம்புவராயன் (1118 -1136), செங்கேணி அம்மையப்பன் கண்ணுடைப் பெருமாளான விக்கிரம சோழச் சம்புவராயர் (1124 - 1136), அம்மையப்பன் சீயன் பல்லவாண்டானான இராஜநாராயண சம்புவராயன் (1146 -1163), செங்கேணி அம்மையப்பன் எதிரிலி சோழச் சம்புவராயன் (1163 - 1178), செங்கேணி அத்திமல்லன் அம்மையப்ப சம்புவராயன் (1178 - 1216), விக்கிரமச் சோழச் சம்புவராயன் (1178 - 1216), செங்கேணி வீரப்பெருமாள் அத்திமல்லன் எதிரிலிசோழச் சம்புவராயன் (1178 - 1216), செங்கேணி வீரசோழன் அத்திமல்லன் குலோத்துங்க சோழச் சம்புவராயன் (வென்று மண்கொண்டான், பக்.26 - 27) போன்ற பல்வேறு மன்னர்கள் பிற்காலச் சோழர்களின் ஆட்சியின்கீழ் குறுநில மன்னர்களாக இருந்ததை அறியமுடிகிறது. மூன்றாம் இராஜேந்திர சோழனுக்குப்பின், சோழ அரசு வலிமை குன்றியதால் சோழ

அரசிலிருந்து விலகிய இராஜகம்பீர சம்புவராயர் படைவீட்டில் முதல் தன்னாட்சியை (1236 - 1268) நிறுவினார். இவ்வாட்சி பத்தாண்டுகள் நீடித்தது. இதன்பின்னர் வென்று மண்கொண்டான் என்ற பட்டம் கொண்ட ஏகாம்பரநாத சம்புவராயர் 1332 - இல் இரண்டாவது தன்னாட்சியை ஏற்படுத்தினார். இவர் காலத்தில் சம்புவராய மன்னர்களின் புகழ் உயர்ந்து நின்றது. இவருக்குப்பின், இவரது மகன் முதலாம் இராஜநாராயண சம்புவராயன் (1337 -1363 ), இரண்டாம் இராஜநாராயண சம்புவராயன் (1338 - 1363), பெயரன், மூன்றாம் இராஜநாராயண சம்புவராயன் (1355 - 1379) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்சிப்பொறுப்பேற்றனர்.

**ஆட்சிப்பரப்பு**

சம்புவராய மன்னர்களின் கல்வெட்டுகள் காணப்படும் இடங்களைக்கொண்டு இவர்களின் ஆட்சிப்பரப்பை நாம் அறிய முடிகிறது. செங்கை மாவட்டத்தில் பொன்னேரி, சைதாப்பேட்டை, திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம், செங்கை, உத்திரமேரூர், மதுராந்தகம், செய்யூர் ஆகிய வட்டங்களும், வடார்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம், அரக்கோணம், வேலூர், ஆர்க்காடு, வாலாசாப்பேட்டை, ஆரணி, செய்யார், போளூர், வந்தவாசி, திருவண்ணாமலை ஆகிய வட்டங்களும், தென்னார்க்காடு மாவட்டத்தில் செஞ்சி, திண்டிவனம், விழுப்புரம், திருக்கோவிலூர், பண்ருட்டி ஆகிய வட்டங்களும், புதுச்சேரியின் ஒரு பகுதியும் இவர்களின் ஆட்சியின்கிழ் இருந்தன. கெடிலம் ஆற்றங்கரை இவர்களின் தென் எல்லையாக விளங்கியது (சம்புவராயர் வரலாறு,ப.105). இதன்மூலம் இன்றைக்குள்ள திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், வாலாஜாபேட்டை, சென்னை, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்ட பகுதிகளும் பாண்டிச்சேரி மாநிலத்தின் சில பகுதிகளும் இவர்களின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பாக இருந்துள்ளதை அறியமுடிகிறது. தற்போது தெற்கில் காவிரி தொடங்கி, வடக்கில் ஆந்திரா வரை சம்புவராயர்களின் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.

**அரசுரிமை**

தந்தைக்குப்பின் மகன் என்கிற வழக்கம் சங்க காலந்தொடங்கி இருந்துள்ளது. சோழ மன்னர்களைப் போன்றே, தந்தைக்குப்பின் மகன் ஆட்சிக்கு வருதல் எனும் பிறங்கடை (வாரிசு) உரிமை முறையினையே இவர்களும் பின்பற்றினர் (மேற்படி,ப.105).

**பட்டங்கள்**

போர்க்களங்களில் பெற்ற வெற்றி மற்றும் அரச நிருவாகமுறை போன்றவற்றின் காரணமாக, சகலலோக சக்கரவர்த்தி, வென்று மண்கொண்டான், சென்ற திசை வென்றான், எதிரிலி, நித்ராவசான விஜயீ, நாடாழ்வான், ஆளப்பிறந்தான், பாண்டிநாடு கொண்டான், சோணாடு கொண்டான், பாலாற்றில் வென்றான், செய்யாற்று வென்றான் (வென்று மண்கொண்டான்,ப.33) போன்ற பல்வேறு சிறப்புப் பட்டப்பெயர்களில் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

**அரச சின்னம்**

சங்ககாலம் முதல் மன்னர்கள் தங்களின் அரச அடையாளமாகக் கொடிகளில் சின்னத்தைப் பயன்படுத்தினர் என்பதை இலக்கியங்கள்வழி அறியமுடிகிறது. மூவேந்தர்கள் வில், புலி, கயல் ஆகியவற்றைத் தங்களின் அரசக் கொடியில் சின்னங்களாகப் பொறித்துக்கொண்டனர். சம்புவராயர்களின் சின்னம் காளைமாட்டுச் சின்னமாகும். செஞ்சிவட்டம் தேவனூரிலுள்ள இரண்டாம் இராசநாராயண சம்புவராயனின் கல்வெட்டின் நடுவில் காளையின் உருவம் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இதேபோன்று திண்டிவனம் வட்டம் புலியனூரில் மூன்றாம் இராசநாராயண சம்புவராயரின் 4 -வது ஆண்டுக் கல்வெட்டு 6 ½ அடி உயரமுடைய பெரிய கல் பலகையில் எழுதி நடப்பட்டுள்ளது. இப்பலகையில் காளை மாட்டின் உருவம் பெரிதாகச் செதுக்கப்பட்டு இருபுறமும் சந்திர சூரியரும்

பொறிக்கப்பட்டுள்ளது (சம்புவராயர் வரலாறு,ப.107). படைவீடு அருகே, கைலாசபுரம் கிராமத்தில் அமைந்துள்ள கைலாசநாதர் திருக்கோயிலுக்கு முன்பாக (சுமார் 200 மீட்டர் தொலைவில்) அமைந்துள்ள கல் ஒன்றில் காளையின் உருவமும் அதன்மேற்பகுதியில் இருபுறமும் சூரிய, சந்திர பிறையும் பொறிக்கப்பட்டுள்ளது. பின்புறம் உள்ள கல்வெட்டுகள் படிக்க முடியாத அளவிற்கு எழுத்துக்கள் பொறிந்துள்ளன (கட்டுரையாளர் கள ஆய்வின் மூலம் கண்டறிந்து ஆவணப்படுத்தியுள்ளார்). அத்துடன், வீரசம்பன் பணம், வீரசம்பன் குளிகை (மேற்படி, ப. 29), நாராயணன் காசு போன்ற பெயர்களில் அச்சிட்டு வெளியிடப்பட்ட சம்புவராயர்களின் நாணயங்களில் முன்பக்கம் காளையின் உருவமும், காளையின் மேற்பக்கத்தில் சூரிய, சந்திர பிறை அடையாளங்களும், பின்பக்கத்தில் குத்துவாளும் அதனைச் சுற்றி னாராயண என்ற எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளன. மேற்படி குறிப்பிடப்படும் பல்வேறு வரலாற்றுத் தரவுகள் மூலம் சம்புவராயர்கள் காளையின் உருவத்தைக் கொடியில் அரச சின்னமாகப் பயன்படுத்தினர் என்பதை அறியமுடிகிறது.

**ஆட்சித்திறம் மற்றும் நிருவாக முறை**

**அ. தலைநகரம்**

> **மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
> **காடும் உடைய தரண் (குறள்:742)**

மணிபோல தெளிந்த நீரும், வளமான மண்ணும், மலையும், அழகான நிழல்தரும் காடும் ஆகிய இந்நான்கும் உடையது அரண் ஆகும் என்கிறார் தெய்வப் புலவர் வள்ளுவர் . அவரின் வாக்கிற்கிணங்கத் தலைநகரங்களை அமைத்து ஆட்சி செய்தவர்கள் சம்புவராயர்கள். வேலூர் மாவட்டத்தில் இன்றைக்குள்ள விரிஞ்சிபுரம் சம்புவராயர் காலத்தில் மரகத நகரம் என்று அழைக்கப்பட்டது. இவ்வூர், பாலாற்றங்கரையின் ஓரத்தில் அமைந்துள்ள அழகிய, வளமான ஊராக இருந்த காரணத்தினால் இங்கே ஒரு தற்காலிகத் தலைநகரத்தையும், மணிமேகலை காப்பியக் காலந்தொடங்கி புகழ்பெற்ற சமய நகரமாக விளங்கிவரும் காஞ்சிபுரத்தில் ஒரு தற்காலிகத் தலைநகரத்தையும் அமைத்த சம்புவராயர்கள், படைவீட்டில் நிரந்தரத் தலைநகரத்தை அமைத்தனர்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் ஆரணியிலிருந்து (மேற்கு) 22 கி.மீ தூரத்திலும் வேலூரிலிருந்து (தெற்கு) 40 கி.மீ தூரத்திலும் போளுக்கு (வடக்கே) 22 கி.மீ தூரத்திலும் (இவற்றிற்கு மத்தியில்) சந்தவாசலுக்கு உள் 7 கி.மீ தூரத்திலும் (மேற்கு) படைவீடு அமைந்துள்ளது. இந்நகரத்திலும் இதைச் சுற்றியுள்ள மலை மற்றும் நிலப்பகுதிகளிலும் வரலாற்றுக்கு முந்தையக் காலத்துக் கற்கருவிகள், பானை ஓடுகள், முதுமக்கள் தாழிகள் மற்றும் பெருங்கற்படைச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பழங்காலத்தில் அருவா நாடு என்றழைக்கப்பட்ட நாட்டின் ஒரு பகுதியாக இவ்வூர் இருந்துள்ளது. சம்புவராயர் ஆட்சிக்காலத்தில் படைவீடு ராஜ்ஜியம், இராஜகம்பீர வளநாடு, மருதரைசர் படைவீடு, இராஜகம்பீர ராஜ்ஜியம் போன்ற பல்வேறு பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்ட இந்நகரம், ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் 24 கோட்டங்களில் ஒன்றான பல்குன்றக்கோட்டத்தின் ஒரு பிரிவாகிய மேயூர் நாட்டில் அமைந்திருந்தது (வென்று மண்கொண்டான், ப. 32). இவ்வூர், தலைநகரமாகவும், போர்ப் பயிற்சி செய்யும் நிரந்தரப் படைநகரமாகவும் விளங்கியது.

**ஆ. கோட்டைகள்**

கோட்டை நகரத்தைச் சுற்றிலும் வலுவான மதிற்சுவர் அமைந்திருந்தது. இது ஏறத்தாழ 30 அடி உயரமிருக்கலாம்; அகலம் 10 அடியாகலாம். அடியில் கருங்கல்லும், மேலே செங்கல்லுமாக வைத்து அடித்தளம் அமைக்கப்பட்டு இம்மதிற்சுவர் கட்டப்பட்டிருந்தது. சிமெண்டிற்குப் பதிலாகக் களிமண் பயன்படுத்தப்பட்டது. இன்றும் இங்கு இம்மதிற்சுவரின் அடித்தளத்தின் எச்சங்களைக் காணலாம். கோட்டையினுள் அரண்மனையும், அதனைச் சுற்றிலும் அமைச்சர்கள், படைத்தலைவர்கள், உயர் அதிகாரிகளின் குடியிருப்புகளும் அமைந்திருந்தன. அகன்ற தெருக்களிலமைந்த இக்குடியிருப்புகளுக்கும், அரண்மனைக்குமான

குடி நீர்க் குழாய்கள் நிலத்தடியில் அமைக்கப்பட்டிருந்தன (சம்புவராயர் வரலாறு, ப.98). என்பதன் மூலம் சம்புவராயர்களின் அரண்மனை எத்தகைய வலிமையுடையதாக இடைக்காலத்தில் இருந்தது என்பதை அறியலாம்.

காவற்கோட்டை, அகக்கோட்டை, புறக்கோட்டை என இருபிரிவுகளாக அமைந்திருந்தது. இவற்றை மக்கள் பெரியகோட்டை, சின்னக்கொட்டையென அழைப்பர் (மேற்படி,ப.98) இக்கோட்டைகள் இரண்டும் தற்போது முற்றிலுமாக அழிக்கப்பட்டு, வேளாண் நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. கோட்டைகளின் எஞ்சிய வெளிப்புற மதிற்சுவர் கட்டடங்கள் வேளாண் நிலங்களுக்கு வரப்புகளாக நிற்கின்றன. அகக்கோட்டையின் மதிற்சுவரைச் சுற்றிலும், பெரிய அகழி இருந்தது. இதன்மேல் கிழக்கிலும், வடக்கிலும் ஆடு பாலங்கள் இருந்தன. கிழக்கிலிருந்த பாலத்தின் வழியே சென்றால் சேனைக்கு மிண்டன் வாசலை அடையலாம். வடக்கிலுள்ள பாலத்தின் வழியே சென்றால் தன்மம் தாங்கியன் வாசலை அடையலாம் ( மேற்படி.ப.98).

**ஆட்சி நிருவாகம்**

சம்புவராய மன்னர்களின் அரசு இராஜகம்பீர ராஜ்ஜியம், படைவீட்டு ராஜ்ஜியம், படைவீட்டு உசாவாடி (மேற்படி,பக்.103 - 104) போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டிருந்தன. இதனை, ஸ்ரீ வீரபுக்கண உடையார் குமாரர் கம்பண உடையார் இராயகம்பீர இராஜ்யம் கைக்கொண்டு ஸ்திர ஸிம்ஹாஸநத்தில் ப்ருதிவி இராஜ்யம் பண்ணி அருளா நின்ற (மேற்படி,ப.103) என்ற விஜயநகர மன்னர் கம்பணனுடைய கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

**அ. அதிகாரிகள்**

- **சேதிராயன்**
- **தொண்டைமா நாயக்கன்**
- **வாணாதிராயன்**
- **செம்பியதரையன்**
- **காலிங்கராயன்**
- **கலியுகவீரபத்ரன்**
- **அரசூருடையான் தெண்ணாயக்கர்**
- **மங்கலகாப்பியராயன் தேவப்பெருமாள் சேதிராயன்**
- **களப்பாளராயன்**
- **மாப்பூதி செந்தாமரைக் கண்ணன்**
- **இராசநாராயணவாணாதிராயர் (மேற்படி, ப.108)**

போன்றவர்கள் சம்புவராயர் ஆட்சியில் அதிகாரிகளாகப் பணியாற்றியுள்ளனர் என்பதை அவர்களின் ஆட்சிக்காலக் கல்வெட்டுகள் வழி அறியமுடிகிறது.

**ஆ. ஊர்ச்சபைகள் - மகாசபைகள்**

சம்புவராய மன்னர்கள் காலத்திலிருந்த ஊர்ச்சபைகள் , பிராமணர்கள் வாழ்ந்த ஊர்களில் இருந்த மகாசபைகள் ஆகியவற்றைப் பற்றியக் குறிப்புகளும் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன (மேற்படி, ப.109).

இதனை,

**குலசேகரச் சம்புவராயன் ஓலை வேப்பூர் ஊரவர்**
**கண்டு விடை**
**குன்றத்தூர் ஊரவர் கண்டு விடை**
**பழம்பட்டு ஊரோமுக்கு**
**காமப்புல்லூர் ஊரவற்கு**

என்று தொடங்கும் இவர்களின் கல்வெட்டுகளால் அறியமுடிகிறது. இதிலிருந்து ஊர்ச்சபைகள் செயல்பட்டதைக் காணலாம் (மேற்படி,ப. 109). சம்புவராயர் ஆட்சிக்காலத்தில் தொண்டை

மண்டலத்தில் மொத்தம் பத்து இடங்களில் மகாசபைகள் இருந்ததைக் கல்வெட்டுக்களில் காண்கிறோம் (மேற்படி, ப.111).

**பொருளியல் நிருவாகம்**

அரசின் எல்லாவிதமான நடைமுறைகளும் அதன் பொருளாதார மற்றும் சமூக அடிப்படையினால் நிர்ணயிக்கப்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இத்தகையப் பொருளாதார அமைப்பினை ஆராய்வதன்மூலம் குறிப்பிட்ட ஒரு சமுதாயம் எத்தகையச் சிறப்புடன் இருந்தது என்பதை அறிந்துகொள்ள முடியும். சம்புவராயர்களின் ஆட்சிக்காலத்தில் சோழர்களின் ஆட்சி காலத்தில் நிலவிய நாடு எனப்படும் வருவாய்த்துறை அமைப்புமுறை நிலவவில்லை. கல்வெட்டுகள், மண்டலம், கோட்டம், நாடு எனப்படும் பழைய அரசியல் நில இயல் பிரிவுகளைக் குறிப்பிட்டாலும் அவை வருவாய்த்துறையைக் குறிப்பிடவில்லை. ஆயினும் இக்காலத்தில் பற்று என்னும் சொல் வருவாய்த்துறையின் பிரிவைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. சம்புவராய மன்னர்கள் பல ஊர்களை உள்ளடக்கிய பற்றுக்களை ஏற்படுத்தியிருந்தனர். இப்பற்றுகளிலிருந்து 40 வகையான வருவாய்கள் பெறப்பட்டுள்ளன (மேற்படி,ப.128). அத்துடன் கல்பாக்கம் அருகே உள்ள சத்ராஸ் சம்புவராயர்கள் காலத்தில் சதுரங்க நாரராயணன் பட்டினம் என்ற பெயரில் கடற்துறைமுகமாக விளங்கியது. இத்துறைமுகத்தின் மூலம் பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டன.

**சம்புவராயர் மாட்சி**

பிற்காலச் சோழர்களுக்குப்பின், தொண்டை மண்டலத்தில் வலிமையான அரசை நிறுவியவர் சம்புவராயர்கள். இவர்கள் காலத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற வேற்று மொழி, இனத்தவர் படையெடுப்பிலிருந்து தமிழ்நாட்டைப் பாதுகாத்தனர். இவர்கள் குறித்து கம்பர் சிலை எழுபது என்ற நூலில்,

**சாத்திர மறைகள் சொற்ற தனிநியமம்வ பூாதோர**
**சூத்திரந் தவறில்வன்னி தோன்றுமெய்ப் புகழ்காப் பாளர்**
**மாத்திரை யளவுஞான மறைப்பின்மா தவங்கூர் சம்பு**
**கோத்திர வரசர்க் கொப்புக் கூறுவதெவரை மாதோ** (வென்று மண்கொண்டான், ப.22)

என்று பாடியுள்ளார். சம்பு கோத்திரத்தில் வந்த அரசர்களுக்கு இணையானவர் என்று யாரையும் ஒப்பிடமுடியாது என்பதன் மூலம் இவர்கள் எத்தகைய புகழுக்குரியவர்கள் என்பதை அறியலாம். இத்துடன், சம்புவராயர் காலத்தில் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த இரட்டைப் புலவர்களான இளஞ்சூரியர் , முதுசூரியர் ஆகியோர் தாம் பாடிய ஏகாம்பரநாதர் உலா எனும் சிற்றிலக்கிய நூலில்,

**விஞ்சு கொடி தடுக்கும் மேனிலா முற்றத்தும், மஞ்சு தவழ்**
**கங்கை கொண்டான் மண்டபத்தும் - வெஞ்சமரில் தத்துபரி**
**பல்லவன் சம்புகுலப் பெருமான் வைத்த துலாபார மண்டபத்தும் — சித்ரமணிக்**
**குளிகையின் மீதும் சுறை நிலா முற்றத்தும் மாளிகையின் மீது மறுகிடத்தும்**

(மேற்படி, ப.23)

என்று பாடி சிறப்பித்துள்ளனர். மேற்கண்ட பாடல்வழி இவர்கள் பல்லவ மரபினர் என்றும் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு துலாபார மண்டபம் ஒன்றை கட்டித்தந்தனர் என்பதும் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.

**போர்கள்**

சோழர்களுக்கு ஆதரவாகப் போர்களங்களில் நின்ற இவர்கள், சிறந்த வீரர்களாக இருந்து சோழர்களுக்கு வெற்றியைப் பெற்றுத்தந்துள்ளனர். நித்ராவசன விஜயீ (உறங்கும் நேரத்தில் வெற்றி கொள்பவன்), சகலலோக சக்கரவர்த்தி, வென்று மண்கொண்டான், எதிரிலி சம்புவராயன், செய்யாற்றில் வென்றான், பாலாற்றில் வென்றான் போன்ற பல்வேறு சிறப்புப்

பெயர்கள் மூலம் இவர்களின் வீரத்தினை அறியமுடிகிறது. அத்துடன் வெற்றியின் நினைவாகத் தொண்டை மண்டலத்தில் பல்வேறு ஊர்களையும் (இராஜகம்பீரன் நல்லூர், இராஜகம்பீர சதுர்வேதிமங்கலம், வீரசம்ப நல்லூர், சம்புவராய நல்லூர்) திருவீதிகளையும் (செய்யாற்றில் வென்றான் திருவீதி, வென்று மண்கொண்டான் திருவீதி) இவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

சேர, சோழப் பேரரசுகளின் முடிவுக்குப்பின், ஆட்சிக்குப் பொறுப்புக்கு வந்த இவர்களின் காலத்தில் அமைதியின்மையும், வேற்று மதத்தவர் படையெடுப்பும் சமூகத்தில் நிலவி வந்தது. எனவே, அச்சூழலில் மக்களையும், மண்ணையும் காப்பதை மட்டுமே முதன்மை நோக்கமாகக் கொண்டு ஆட்சி செய்த இவர்கள், போரில் ஈடுபடுவதைத் தவிர்த்து வந்தனர். தமிழகத்தில் சுல்தான்களின் ஆட்சியை அகற்ற மதுரையை நோக்கிச் சென்ற விஜயநகரப் படை சம்புவராயர்கள் மீது 1352 -இல் போர்த்தொடுத்தது. இப்போரில் சம்புவராயர்களை வெற்றி கொள்ள முடியாமல் திரும்பிய விஜயநகரப் படையினர் சுமார் பத்தாண்டுகள் கழித்து மீண்டும் 1362 - இல் இரண்டாம் முறையாகப் போரிட்டு வென்றனர். இவர்களின் உதவியோடு மதுரை சுல்தான்களை விஜயநகர அரசர்கள் வீழ்த்தினர் என்பதை கங்காதேவி எழுதிய மதுரா விஜயம் குறிப்பிடுகிறது.

**அறப்பணிகள்**

ஒரு நூற்றாண்டு காலம் ஆட்சி செய்த இவர்கள் தொண்டை மண்டலத்தில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட பல்வேறு கோயில்களுக்குத் திருப்பணி, கொடைகள் அளித்தனர். புதிதாகக் கோயில்களை எடுப்பித்து அதற்கு இறையிலி நிலங்களையும், கொடைகளையும் வழங்கினர். அத்துடன் வேளாண் உற்பத்திக்காக ஏரிகள், குளங்கள், ஆற்றுக்கால்வாய்கள் எடுக்கப்பட்டன. கோடைக்காலங்களில் தண்ணீப் பந்தல்கள் அமைக்கப்பட்டன.

**முடிவாக**

- திண்டிவனம் அடுத்த முன்னூர் பகுதியைச் சார்ந்தவர் சம்புவராயர்கள். இவர்கள் சங்க காலத்தில் ஆட்சி செய்த நல்லியங்கோடன் மரபினர் ஆவர்.
- பிற்காலச் சோழர்களின்கீழ் படைத்தளபதிகளாக இருந்த இவர்கள், அவர்களின் ஆட்சி முடிவுற்றபின், தொண்டை மண்டலத்தில் தன்னாட்சி அமைத்தனர்.
- படைவீடு இவர்களின் நிரந்தரத் தலைநகரமாக விளங்கியது.
- வீரசம்பன் குளிகை, நாராயணன் காசு போன்ற நாணயங்களை வெளியிட்டனர்.
- அரசக் கொடி, நாணயத்தில் காளை யின் உருவத்தைப் பொறித்தனர்.
- படைவீட்டில் அகக்கோட்டை, புறக்கோட்டை, மலைக்கோட்டை, அரண்மனை ஆகியவற்றை அமைத்தனர். அதன் சிதைந்த அடிச்சுவர்கள் இன்றைக்கும் உள்ளன.
- அரச நிருவாகத்தில் ஊர்ச்சபைகள், மகாசபைகள் செயல்பட்டன. பல்வேறு வரிகள் விதிக்கப்பட்டன.
- போர்களில் பெற்ற பல்வேறு வெற்றியின் நினைவாக புதிய ஊர்களும், தெருக்களும் அமைக்கப்பட்டன.
- கோயில்கள், கொடைகள், நீர் நிலைகள் எடுக்கப்பட்டன.

**மேற்கோள் நூல்கள்:**


1. தங்கவேலு.கோ.டாக்டர், தியாகராசன். இல, சம்புவராயர் வரலாறு, முதல்பதிப்பு,1990, வெளியீடு - கோபால் நாராயணன் நினைவு கல்வி அறக்கட்டளை, கொரட்டூர்,சென்னை.
2. அமுல்ராஜ். அ. முனைவர், வென்று மண்கொண்டான், முதல்பதிப்பு, 2021, வெளியீடு - கல்விளக்கு பதிப்பகம், படைவீடு, திருவண்ணாமலை மாவட்டம்.
3. வலைத்தமிழ் இணையம்.

ARAN International e-Journal of Tamil Research
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com